*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*19 12 2025 FRIDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

1. ***நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் மறு தேதி குறிப்பிடாமல் இன்று ஒத்தி வைக்கப்பட்டன.***

2. ***கோவா யூனியன் பிரதேசம் விடுதலை பெற்றதன் 64வது ஆண்டு விழா இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.***

3. ***வடமாநிலங்களின் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதை அடுத்து, ரயில் மற்றும் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளன.***

4. ***QUAD அமைப்பில் உறுப்பினராக உள்ள இந்தியாவுடன் பாதுகாப்பு உறவை வலுப்படுத்தும் நோக்கில், அமெரிக்கா செயல்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.***

5. ***தில்லி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Shruti Ahlawat அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

>>>>>><<<<<<

***நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் மறு தேதி குறிப்பிடாமல் இன்று ஒத்தி வைக்கப்பட்டன.***

***மக்களவை இன்று காலை கூடியபோது, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதை அடுத்து, மக்களவை ஒத்தி வைக்கப்பட்டது.***

***100 நாள் வேலை திட்டத்திற்கு மகாத்மா காந்தியின் பெயர் நீக்கப்பட்டதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து, நாடாளுமன்ற வளாகத்தில் 12 மணிநேர ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.***

*இன்று காலை அவை கூடியபோது இதே பிரச்சினை எதிரொலித்ததால், மக்களவை மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுவதாகவும், குளிர்கால கூட்டத்தொடர் முடிவுற்றதாகவும் மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.*

*இந்தக் கூட்டத்தொடரில் 15 நாட்கள் அவை நடைபெற்றது.*

*தனியார் நிறுவனங்கள் அணுசக்தி உற்பத்தியில் ஈடுபடுவதற்கான மசோதா, 125 நாட்கள் வேலைக்கு உத்தரவாதம் அளிக்கும் வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் உள்ளிட்ட முக்கிய மசோதக்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.*

*மாநிலங்களவையும் இன்று மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.*

*நிறைவாக பேசிய மாநிலங்களவைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், குளிர்கால கூட்டத் தொடரின் போது, 92 மணி நேரம் அவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், 59 தனிநபர் மசோதாக்கள் அவையில் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் கூறினார்.*

*வந்தேமாதரம் பாடல் இயற்றப்பட்டதன் 150வது ஆண்டு விழா தொடர்பாக, உறுப்பினர்கள் பேசுவதற்கு சிறப்பு அமர்வு நடைபெற்றதாகவும், இதில் 82 உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.*

*தேர்தல் தொடர்பான சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்த விவாதத்தில் 57 உறுப்பினர்கள் கலந்து கொண்டதாகவும் அவர் கூறினார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா குறித்த விவாதத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டதாகவும், நாடாளுமன்ற மாண்பை குலைக்கும் வகையில் மசோதா நகல்களை கிழித்தெறிந்ததாகவும், இத்தகைய ஒழுங்கற்ற நடவடிக்கையை உறுப்பினர்கள் கைவிட வேண்டும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார்.*

*>>>>>><<<<<<*

*கோவா விடுதலை பெற்றதன் 64வது ஆண்டு விழா இன்று கொண்டாடப்படுகிறது.*

இந்நாளையொட்டி, கோவா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற விழாவில பேசிய முதலமைச்சர் டாக்டர் பிரமோத் சாவந்த், 2047ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி அனைவரும் பயணிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

2037ஆம் ஆண்டுக்குள் கோவா-வை வளர்ச்சியடைந்த மாநிலமாக மாற்றுவதற்கு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, தலைவர்கள் பலர் கோவா மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் கோவா விடுதலைக்கு பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திலிருந்து கோவாவை விடுவிப்பதற்கு, பாடுபட்ட வீரர்களின் அர்ப்பணிப்பை நாடு நினைவுகூருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள பதிவில், கோவா சுதந்திரத்திற்காக பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை போற்றுவதாக தெரிவித்துள்ளார்.

கோவா-வின் வளர்ச்சிக்காக சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகம், இன்றைய தலைமுறையினருக்கு உத்வேகம் அளிப்பதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட தியாகிகள் பண்டிட் *Ramprasad Bismil, Ashfaq Ulla Khan* மற்றும் ரோஷன் சிங் ஆகியோரின் நினைவு தினத்தை ஒட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில். சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய நிகழ்வாக கருதப்படும் *Kakori* ரயில் போராட்டத்தின் போது, அவர்கள் வீர மரணம் அடைந்ததாகவும், நாட்டிற்கு அவர்கள் ஆற்றிய பங்கு இன்றியமையாதது என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டு மக்களால், அவர்களின் வீர த்தை ஒருபோதும் மறக்க இயலாது என்றும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், வேளாண் நடவடிக்கைகளை பாதிக்காத வகையில், ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

வடஇந்தியாவின் பல பகுதிகளில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதை அடுத்து, விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விமானங்களில் பயணிப்போர், தங்களுக்கான விவரங்களை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அதற்கேற்றவாறு பயணத்தை மாற்றியமைத்துக் கொள்ளலாம் என்றும் அமைச்சம் ஆலோசனை கூறியுள்ளது.

விமான நிலையங்களில் பயணம் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்வதற்கு சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வடமாநிலங்களில் நிலவும் பனிப்பொழிவால் ரயில் சேவையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

இன்று 60 ரயில்கள், 5 மணி நேரம் தாமதமாக இயக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே, ரயில் நிலையங்களுக்கு சென்று பயணம் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்று ரயில்வே அறிவுறுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

*பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், 2025-26ஆம் நிதியாண்டில் 9 கோடியே 71 லட்சத்து 41 ஆயிரத்து 402 விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*தமிழகத்தில் இந்த திட்டத்தின் கீழ் 22 லட்சத்து 74 ஆயிரத்து 199 விவசாயிகள் பயன்பெற்றுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இந்த திட்டம், தங்களுக்கு பெரும் பயன் அளித்திருப்பதாக தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - விவசாயி 30 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*தேசிய ஆயத்த ஆடை நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்கான நுழைவுத் தேர்வு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மத்திய ஜவுளி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்த நிறுவனம், 2026-27ஆம் ஆண்டுக்கான பயிற்சி வகுப்புகளில் இடஒதுக்கீடு அடிப்படையில் மாணவர்களை சேர்ப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.*

*மாற்றுத் திறனாளிகள், ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கான கட்டணம் 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.*

*இதற்கான விண்ணப்பப் படிவத்தை nift.ac.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

*ஜனவரி 6 ஆம் தேதி விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கடைசி நாளாகும்.*

*நாடுமுழுவதும் 100 நகரங்களில் இதற்கான நுழைவுத்தேர்வு அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 8ஆம் தேதி நடைபெறும்,*

*>>>>>><<<<<<*

*ஓய்வு பெற்ற இந்திய தகவல் பணி அதிகாரி Baqar Mirza ஹைதராபாதில் நேற்றிரவு காலமானார். அவருக்கு வயது 67.*

*தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பல்வேறு பிரிவுகளில் அவர் பணியாற்றியுள்ளார்.*

*பத்திரிகை தகவல் அலுவலகம், புத்தக வெளியீட்டுப் பிரிவு, ஆகாஷ்வாணி, தூர்தர்ஷன் ஆகிய அலுவலகங்களில் பல்வேறு நிலைகளில் அவர் பணியாற்றியுள்ளார்.*

*2018ஆம் ஆண்டு குவஹாத்தியில் DD செய்திப் பிரிவின் இணை இயக்குநராக Baqar Mirza ஓய்வு பெற்றார்.*

*>>>>>><<<<<<*

*QUAD அமைப்பில் உறுப்பினராக உள்ள இந்தியாவுடன் பாதுகாப்பு உறவை வலுப்படுத்தும் நோக்கில், அமெரிக்கா செயல்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.*

*இந்திய பசிபிக் பெருங்கடல் பகுதியில் சீனா ஏற்படுத்தி வரும் சவாலான சூழலை எதிர்கொள்வதற்கு ஏதுவாக, பாதுகாப்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.*

*2026ஆம் நிதியாண்டில், தேசிய பாதுகாப்பு உத்தரவாத சட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான திட்டத்தில் கையெழுத்திட்டுள்ள திரு. ட்ரம்ப், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அச்சறுத்தல்களை எதிர்கொள்ளவும், பாதுகாப்பு தளவாட உற்பத்தியை வலுப்படுத்தவும் அமெரிக்கா விரும்புவதாக கூறியுள்ளார்.*

*அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டுள்ள இந்தியாவுடனான பாதுகாப்பு தளவாட வர்த்தகம், கடல்சார் பாதுகாப்பு, கூட்டு ராணுவப் பயிற்சி, மனிதநேய அடிப்படையிலான உதவி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் திரு. ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

***தில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Shruti Ahlawat அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

***மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-0, 6-1 என்ற செட்கணக்கில் கஜகஸ்தானின் Aruzhan Sagandikova-வை வென்றார்.***

***>>>>>><<<<<<***